# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8069834

C

1. District மாவட்டம் : DVAC — PS காவல்நிலையம்: V+AC Hqrs — Year ஆண்டு: 2020 — FIR No. மு.த.அ. எண்: 05 — Date நாள்: 09.03.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7, 12.
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 6th March 2020
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை Between 1230 hrs and 2330 hrs on 06.03.2020.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.03.2020 — Time நேரம் at 1200hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.03.2020 — Time நேரம் at 1230 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South East 20kms.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Office of The Tahsildar No:3, Rajiv Gandhi Salai, Kumaran Nagar 1st Street, Sholinganallur.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. S. Judy Abigail — Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A.K. Samuel
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Inspector of Police — (g) Address : முகவரி DVAC, No: 293, MKN Road Alandur, Chennai - 16.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tr. A. Prabakaran, Tahsildhar, Sholinganallur (2) Tmt. Priya, Deputy Inspector of Survey (3) Tmt. P. Jaya, Land Record Draftsman (4) Tr. Sivakumar, Record Clerk (5) Tr. N. Kumar, Office Assistant, (6) Tr. Pandian (7) Selvaraj (8) Venkatesan.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted cash of Rs 1,24,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Contents is enclosed in a Seperate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...Judy Abigail... Rank ...Inspector of Police... to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Judy 9/3/2020

15. Date & Time of despatch to the court: Despatched on 09.03.2020.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ...Judy Abigail...
Rank: நிலை ...Inspector of Police... No. எண்
SIC, DVAC, Chennai.

INSPECTOR OF POLICE,
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.5/2020 சட்டப்பிரிவு 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு</u>

நான் 06.03.2020 அன்று பிற்பகல் சுமார் 12.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் வட்டாட்சியர் திரு.அ.பிரபாகரன் மற்றும் நில அளவைப் பிரிவைச் சேர்ந்த வட்டத் துணை ஆய்வாளர், சார் ஆய்வாளர்கள், நில அளவர், வட்ட ஆவண வரைவாளர், பதிவறை எழுத்தர் அறை மற்றும் இதர அலுவலர்கள், அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு உரிய அரசுப்பணியை செய்து தர கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் கிடைத்தது. எனது அலுவலகத்திற்கு கிடைத்த அந்த தகவலை அன்று (06.03.2020ந் தேதி) சுமார் பிற்பகல் 12.30 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததின் பேரில், திடீர் சோதனை அரசு சாட்சிகள் முன்னிலையில் மேற்படி சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.03.2020ந் தேதி மதியம் சுமார் 13.30 மணி முதல் இரவு 23.30 மணி வரை நடைபெற்றது. மேலும் இது தொடர்பாக சோதனை ஜாபிதா தயார் செய்யப்பட்டது. சோதனை ஜாபிதாவின் அசலை இத்துடன் இணைத்துள்ளேன்.

பின்னர் எனது அலுவலகம் வந்து மேற்படி திடீர் சோதனை நடைபெற்றது தொடர்பான தகவலை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து உரிய அனுமதி பெற்றேன். பின்னர் சோதனை ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ள குற்றங்களுக்காக எதிரிகள் திரு.A.பிரபாகரன், வட்டாட்சியர், திருமதி.C.பிரியா, வட்ட துணை ஆய்வாளர், திருமதி.P.ஜெயா, வட்ட ஆவண வரைவாளர், திரு.சிவகுமார், பதிவறை எழுத்தர், திரு.குமார், அலுவலக உதவியாளர் மற்றும் இடைதரகர்களான திரு.பாண்டியன், திரு.வெங்கடேசன் மற்றும் திரு.செல்வராஜ் ஆகியோர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.5/2020 சட்டப்பிரிவு 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018-யின் படி இன்று (09.03.2020) தேதி மாலை 03.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அசல் முதல் தகவல் அறிக்கை, முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர் மற்றும் தனி நீதிபதி, செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

<u>இணைப்பு :-</u> சோதனை ஜாபிதா 06.03.2020 (அசல்) - பக்கங்கள் 5 முதல் 20 வரை)

**INSPECTOR OF POLICE,**
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.

<u>சோதனை ஜாபிதா</u>

| | | |
|---|---|---|
| சோதனை நடைபெறும் அலுவலகம் | | வட்டாட்சியர் அலுவலகம்,<br>சோழிங்கநல்லூர் வட்டம்,<br>எண்.3, முதல் குறுக்கு தெரு,<br>குமரன் நகர், சோழிங்கநல்லூர்,<br>சென்னை-119. |
| சோதனை நடைபெறும்போது உடனிருந்த சாட்சிகள் | | 1) திரு.தி.கெங்கையன், வயது 53/2020, த/பெ.ரா.திருமலை, இளநிலை உதவியாளர் மற்றும்<br><br>2) மு.சரளா, வயது 35/2020, க/பெ.ரா.சங்கர நாராயணன், இளநிலை உதவியாளர்,<br>பொது மேலாளர் (பொறியியல்) அலுவலகம்,<br>தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 3வது பால்பண்ணை, சோழங்கநல்லூர்,<br>சென்னை-600 119. |
| சோதனை மேற்கொள்ளும் காவல் அலுவலர்கள் | | 1. திருமதி.எஸ்.ஜூடி அபிகேயில்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை<br>ஆலந்துார், சென்னை-16.<br><br>2. திரு.ஜி.லாரன்ஸ்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை<br>ஆலந்துார், சென்னை-16.<br><br>3. திரு.எஸ்.செந்தில் குமார்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை<br>ஆலந்துார், சென்னை-16. |

M. Sarala
M. SARALA

| | | |
|---|---|---|
| | | 4. திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை<br>ஆலந்துார், சென்னை-16. |

சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் வட்டாட்சியர் திரு.அ.பிரபாகரன் மற்றும் நில அளவைப் பிரிவைச் சேர்ந்த வட்டத் துணை ஆய்வாளர், சார் ஆய்வாளர்கள், நில அளவர், வட்ட ஆவண வரைவாளர், பதிவறை எழுத்தர் அறை மற்றும் இதர அலுவலர்கள், அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு உரிய அரசுப்பணியை செய்து தர கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.ஜூடி அபிகேயில் அவர்களின் அலுவலகத்திற்கு கிடைத்தது. மேற்படி தகவலை இன்றைய தேதியில் (06.03.2020) பிற்பகல் சுமார் 12.30 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டது. இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு எனது காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வழியாக தகவல் தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததன் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

ஆய்வாளர் திருமதி.எஸ்.ஜூடி அபிகேயில், திடீர் சோதனைக்கு இரு சாட்சிகளை அனுப்பி வைக்க வேண்டி துணை பொது மேலாளர் (பொறியியல்), தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 3வது பால்பண்ணை, சோழங்கநல்லூர், சென்னை-600119, அவர்களுக்கு தொலைபேசி மூலம் சாட்சிகள் வேண்டி தெரிவித்ததன்பேரில் பேரில், சாட்சிகளாக 1) திரு.தி.கெங்கையன், வயது 53/2020, த/பெ.ரா.திருமலை, இளநிலை உதவியாளர், மற்றும் 2) மு.சரளா, வயது 35/2020, க/பெ.ரா.சங்கர நாராயணன், இளநிலை

T. Gangaiah 6/3/2020 (T. GANGAIAH)
M. Sarala
M. SARALA

Judy Ann/SIC

S. 6.3.2020

6.3.2020

6.3.2020

உதவியாளர், இருவரும் பொது மேலாளர் (பொறியியல்) அலுவலகம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 3வது பால்பண்ணை, சோழங்கநல்லூர், சென்னை-600119, இன்று 06.03.2020ந் தேதி மதியம் சுமார் 13.00 மணியளவில் சோழிங்கநல்லூர், சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் வந்தனர். அவர்களிடம் என்னையும் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு, மேற்படி சோழங்கநல்லூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் சோதனை செய்ய உள்ள விவரத்தை தெரிவித்தேன். மேற்படி இரண்டு சாட்சிகளும் சோதனையின் போது சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டனர். மதியம் சுமார் 13.30 மணியளவில் சோதனை தொடங்கப்பட்டது.

சோழங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் இராஜீவ் காந்தி சாலை, குமரன் நகர், முதல் தெரு, எண்.3 என்ற முகவரியில் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகம் வடக்கு நோக்கி மெயின் வாசல் காணப்படுகிறது. மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும், கிழக்கு பக்கத்தில் உள்ள அலுவலக அறையில் ஓர் ஆண் மற்றும் மூன்று பெண்கள் இருக்கையில் அமர்ந்து பணியாற்றி கொண்டிருந்தனர். அந்த அறையின் வடக்கு பக்கத்தில் உள்ள இருக்கையில் தெற்கு நோக்கி அமர்ந்திருந்த முதல் நபரை விசாரித்த போது, தனது பெயர் திரு.அ.முகமது யூனுஸ், த/பெ.அப்துல் ரகூப் என்றும் தான் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரது அருகே இருந்த இருக்கையில் இருந்தவரை விசாரித்தபோது தனது பெயர் திருமதி. வி.சீதாலட்சுமி, க/பெ. திரு.ஐயப்பன், இந்த அலுவலகத்தில் தேர்தல் பிரிவு எழுத்தராக தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும், அவரருகே இருந்தவரை விசாரித்தபோது திருமதி.சசிகலா, க/பெ.மணிகன்டன் என்றும் தானும் இவ்வலுவலகத்தில் தேர்தல் பிரிவு எழுத்தராக தினக்கூலி அடிப்படையிலும், அடுத்து ஆ-2 இளநிலை உதவியாளர் திரு.கிருபா சங்கர், த/பெ.முத்துசாமி, திருமதி.சு.குணசுந்தரி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், தலைமையிட துணை வட்டாட்சியர்

திரு.வெங்கடாசலபதி, த/பெ.சீனித் தேவர் ஆகியோர் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தனர்.

பின்னர் சாட்சிகளின் முன்னிலையில் முதலில் அமர்ந்திருந்த திரு.அ.முகமது யூனுஸ் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.100/- (ஒரு நூறு ரூபாய் நோட்டு) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. அடுத்து திருமதி.சீதாலட்சுமி, க/பெ.ஐயப்பன் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.5,280/- (ரூ.2,000/- x 2, ரூ.500/- x 2, ரூ.100/- x 1, ரூ.50/- x 2, ரூ.10/- x 8 Total Rs.5,280/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தாம்பரத்திலுள்ள கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி லிமிடெட் என்ற நிதி நிறுவனத்தில் எனது தாயார் திருமதி.வி.இந்திராணி என்பவரின் பெயரில் நகையை அடகு வைத்ததன் பேரில் ரூ.25,000/- பெற்று தனக்கு கொடுத்ததாகவும், அதில் அவர் இன்று ரூ.5,280/-ஐ மளிகை சாமான் வாங்குவதற்காக கொண்டு வந்ததாக கூறியதால், இந்த விவரம் உறுதி செய்யப்பட்டு, அப்பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. அடுத்து இருந்த திருமதி.சசிகலா என்பவரை என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.420/- (ரூ.200/- x 1, ரூ.100/- x 1, ரூ.50/- x 2, ரூ.10/- x 2 Total Rs.420/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. அடுத்து இளநிலை உதவியாளர் திரு.கிருபா சங்கரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.100/- (ஒரு நூறு ரூபாய் நோட்டு) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது.

மேற்படி இதே அறையின் தென்புறத்தில் உள்ள தாசில்தார் அறைக்கு வெளியே தெற்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் திரு.ந.குமார், த/பெ.நடராஜன் என்றும், தான் இந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வருவதாகவும், விண்ணப்பம் அளிக்க வருவோரிடம் விண்ணப்பங்களை பெற்று வரிசைப்படுத்தி ஆர்.பி.டி. எண் அளித்து, இந்த அலுவலகத்தில் பணியாற்றும் மேற்சொன்ன இரண்டு சர்வேயர்கள் பார்வைக்கு வைப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் திரு.குமார் அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.150/- (Rs.100/- x 1, Rs.50/- x 1 Total Rs.150/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. சந்தேகத்தின் பேரில் அலுவலக வளாகத்தில் உள்ள அவரது இருசக்கர வாகனத்தை (Registration No.TN-07-CR-9766 Honda Activa) சோதனை செய்தபோது வாகனத்தின் இருக்கைக்கு கீழுள்ள டிக்கியில் ரூ.24,000/- (ரூ.2000x8= ரூ.16,000; ரூ.500x16= ரூ.8,000/-) பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவர் அதற்கு தகுந்த முகாந்திரம் அளிக்காததால், மேற்படி ரூ.24,000/- சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

பின்னர் அலுவலகத்தின் உள்ளே வட்டாட்சியர் அறைக்கு கிழக்கே அமர்ந்திருந்த திருமதி.பிரபாவதி, க/பெ. தங்கராஜ் என்பவரிடம் உள்ள பணத்தை குறித்து கேட்க தனது கைப்பையிலிருந்து ரூ.5,400/- எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்த போது அதில் Rs.2000x2= Rs.4000/-; Rs.200x1 = Rs.200/-; Rs.100x12 = Rs.1,200/- ஆக மொத்தம் ரூ.5,400/- இருந்தது. இந்த பணம் குறித்து கேட்க தனது மகன் செல்வக்குமார் என்பவரின் மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். இந்தப் பணத்தை வீட்டின் அருகில் உள்ள திரு.பழனிச்சாமி என்பவரிடம் கடனாக வாங்கியதாக கூறினார். அது குறித்து

6.3.2020

6.3.2020

6.3.2020

திரு.பழனிச்சாமி என்பவரிடம் செல்பேசியில் தொடர்பு கொண்டு (செல்பேசி எண்.98840567110) கடன் கொடுத்தவரிடம் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, அவர் திருமதி.பிரபாவதிக்கு கடனாக கொடுத்ததாக கூறியதைத் தொடர்ந்து, திருமதி.பிரபாவதி கூறிய விளக்கம் உறுதி செய்யப்பட்டதன் பேரில், மேற்படி ரூ.5,400/- சாட்சிகளின் முன்னிலையில் திருமதி.பிரபாவதிக்கு திருப்பி அளிக்கப்பட்டது. அடுத்து அமர்ந்திருந்த திருமதி.சு.குணசுந்தரி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.220/- (Rs.100/- x 2, Rs.20/- x 1 Total Rs.220/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. அடுத்து அமர்ந்திருந்த திரு.சீ.வெங்கடாசலபதி, த/பெ.சீனித் தேவர், தலைமையிட துணை வட்டாட்சியர் அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.200/- (Rs.100/- x 2) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது.

பக்கத்தில் உள்ள அறையில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.ச.தமிழ்ச்செல்வி என்பவர் இருந்தார். அவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.130/- (Rs.100/- x 1, Rs.10 x 3 Total Rs.130/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. அடுத்து அமர்ந்திருந்த திரு.சீ.விக்னேஷ், த/பெ.சீனிவாசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.400/- (Rs.200/- x 1, Rs.100 x 2, Total Rs.400/-) இருந்தது தெரிய வந்தது.

அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது.

பின்னர் தாசில்தார் திரு.பிரபாகரன் அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.2,000/- (நான்கு ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்) இருந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. வட்டாட்சியரின் அறையை சோதனையிட்டபோது, இடது பக்கத்தில் உள்ள இரும்பு பீரோவை சோதனை செய்தபோது அதில் ரூபாய் நோட்டுகள் முறையே Rs.100x100 = Rs.10,000/-, 20 ரூபாய் நோட்டு முறையே Rs.20x1= Rs.20/-, 10 ரூபாய் நோட்டுகள் முறையே Rs.10x3= Rs.30/- மற்றும் பணமதிப்பிழப்பு (Demonitization) செய்த 500 ரூபாய் நோட்டுகள் முறையே Rs.500x189 = Rs.94,500/-, ஆக மொத்தம் ரூ.1,04,550/- இருந்தது. இதனுடன் வெள்ளை தாளில் சிகப்பு நிற மையினால் எழுதப்பட்ட எழுத்துக்கள் முறையே 500x100 = 50,000; 500x99 = 49,500; 100x100 = 10,000; 20x1=20, 10x3=30 மொத்தம் ரூ.1,09,550/- என்று இருந்தது. அதன் இடது பக்கத்தில் பென்சிலால் 27.04.15 5000/- PA MAM என்று எழுதப்பட்டிருந்தது. அதனுடன் சிறிய துண்டு காகிதத்தில் TA – 64034; Conti – 29343; EB – 16,171 Total 1,09,548 என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி தொகை குறித்து வட்டாட்சியர் திரு.பிரபாகன் அவர்களிடம் கேட்ட போது, தன்னிடம் எவ்வித விவரமோ, பொறுப்போ ஒப்படைக்கப்படவில்லை என்பதால், அதுகுறித்த விவரம் ஏதும் எனக்கு தெரியவில்லை என்று கூறினார். அத்துண்டுச் சீட்டில் குறிப்பிட்டுள்ளதன்படி, 2015ஆம் ஆண்டு ஏதேனும் தொகை பட்டியலில் பெறப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்ததில், 2015ஆம் ஆண்டு 14 பட்டியல்களாக பெறப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. இத்தொகையானது கருவூலத்திலிருந்து பெறப்பட்டு, அலமாரியில் வைக்கப்பட்டு எவருக்கும் அளிக்காமல்,

(T. KANNAIYAN) 06/03/2020

M. SARALA 06/03/2020

Judge App/SC 6.3.2020

6.3.2020

6/3/2020

அதிலிருந்து ரூ.5,000/- பி.ஏ. மேடம் என குறிப்பிட்டு வழங்கப்பட்டிருக்கலாம் என்பதால், தற்போது அதில் ரூ.5,000/- குறைவாக ரூ.1,04,550/- உள்ளது என்றும், அது குறித்து அடுத்து வந்த வட்டாட்சியர்களுக்கும் தெரிவிக்கப்படாததால், அப்படியே இருந்திருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக வட்டாட்சியர் அவர்கள் ஒரு கடிதத்தையும், அது சம்பந்தமாக எம்.டி.சி.50 பதிவேட்டின் நகலையும் அளித்ததன் பேரில் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பின்னர் தாசில்தார் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள நில அளவைப் பிரிவு அலுவலகத்தில் திருமதி.பிரியா, க/பெ.செல்வ விநாயகம், வட்ட துணை ஆய்வாளர், திருமதி.ஜெயா, க/பெ.வரதராஜன், வட்ட ஆவண வரைவாளர், திரு.சிவகுமார், த/பெ.முருகேசன், தலைமை பதிவறை எழுத்தர், திருமதி.மீரா, க/பெ.ஜீவானந்தம், மற்றும் திருமதி.நசீமா என்கிற விஜயா, க/பெ.வேலு ஆகிய இருவரும் தேர்தல் பிரிவு தினக்கூலி எழுத்தர்களாகவும், திரு.நாகராஜ், த/பெ.ராஜா, சார் ஆய்வாளர், நில அளவை (ஒக்கியம் துரைப்பாக்கம், காரப்பாக்கம், பெருங்குடி, சீவரம், ஜல்லடம்பேட்டை துரைப்பாக்கம் பகுதிகள்), திரு.அருள்முருகன், த/பெ.மயில்வேல், சார் ஆய்வாளர், நில அளவை (மடிப்பாக்கம்-1, 2, பள்ளிக்காரணை பகுதிகள்) ஆகியோர் பணியாற்றுவதாக தெரிவித்தார்கள்.

பின்னர் வட்ட துணை ஆய்வாளர் திருமதி.பிரியா அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.50/- (ஒரு ஐம்பது ரூபாய் நோட்டு) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. திருமதி.ஜெயா அவர்களை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.280/- (Rs.100/- x 2, Rs.20 x 2, Rs.10/- x 4, Total Rs.280/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின்

முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. திரு.சிவகுமார் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.350/- (Rs.200/- x 1, Rs.100/- x 1, Rs.50/- x 1, Total-Rs.350/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. திருமதி.மீரா என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.150/- (Rs.100/- x 1, Rs.50/- x 1, Total-Rs.150/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. திருமதி.நசீமா என்கிற விஜயா என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.160/- (Rs.100/- x 1, Rs.50/- x 1, Rs.10/- x 1, Total-Rs.160/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. திரு.நாகராஜ் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.1,750/- (Rs.500/- x 2, Rs.200/- x 1, Rs.50/- x 1, Total-Rs.1,750/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது. திரு.அருள் முருகன் என்பவரை சோதனையிட்ட போது, அவரிடம் ரூ.3,950/- (Rs.500/- x 7, Rs.200/- x 1, Rs.100/- x 2, Rs.50/- x 1, Total-Rs.3,950/-) இருந்தது தெரிய வந்தது. அது குறித்து அவரை கேட்க, தான் கைச்செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், அந்த பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திரும்ப வழங்கப்பட்டது.

மேலும் நில அளவைப் பிரிவு வட்ட துணை ஆய்வாளர் அலுவலக அறைக்கு முன் நின்றிருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் செல்வராஜ், த/பெ.சீனிவாசன் என்றும் தான்

T. Thanthaiyan) 6/3/2020
(T. THANTHAIYAN)

M. Sarala
6/3/2020
M. SARALA

S.S. 6/3/2020

6/3/2020

6/3/2020

இவ்வலுவலகத்தில் இருப்பதாகவும், சர்வேயர் அருள்முருகன் கூறும் அலுவலக வேலைகளை செய்வதாகவும், அவர் கூறும் மனுதாரர்களிடமிருந்து மனுக்களை பெற்று அலுவலகம் வந்து மனுதாரர் பதிவேட்டில் தனது கைப்பட பதிவு செய்து, எல்.ஆர்.டி. திருமதி.ஜெயா அவர்களிடம் ஒப்படைப்பதாகவும் கூறினார். அவர் தனது கைப்பட எழுதிய மனுதாரர் பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் அலுவலகத்தின் வாசலில் சர்வேயர் நாகராஜன் என்பவரை பார்ப்பதற்காக நின்றிருந்தவரை விசாரித்தபோது தனது பெயர் வெங்கடேசன், த/பெ.ஏழுமலை என்றும் தான் இவ்வலுவலகத்தில் சர்வேயர் நாகராஜன் என்பவருக்கு அலுவலக சம்பந்தப்பட்ட பணிகளுக்கு உதவி செய்து தினக்கூலியாக உள்ளதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூ.260/-ஐ இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டதற்கு தனது சொந்த பணம் என்றும் செலவுக்கு வைத்திருப்பதாக தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே சாட்சிகளின் முன்னிலையில் திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் கையில் வைத்திருந்த சிகப்பு நிற பையிலிருந்து எடுக்கப்பட்ட தாலுகா அலுவலக அசல் ஆவணங்களின் விவரங்கள் பின்வருமாறு:

1) C.A.No.1502/2019 in the name of Lajbai Patel
2) பார்வை ஆர்.பி.டி எண்.2019/0105/02/255145/2020, நாள்.27.01.2020 in the name of V.K.Godandaraman
3) பார்வை ஆர்.பி.டி எண்.194215/2019, நாள்.13.12.2019 in the name of Devadoss and Vasanthi.
4) பார்வை ஆர்.பி.டி எண்.253784/2020, நாள்.24.01.2020 in the name of R.Krishnan
5) பார்வை RTR No. 253087/19, dt. 31.12.2019 in the name of N.Kandeeban.
6) பார்வை RTR No. 2020/0105/02/254740,254123/2020, dt. 18.02.2020 in the name of Sathishkumar.
7) கே.பிச்சேஸ்வரன் என்பவர் வீட்டு மனை பட்டாவிற்காக தாசில்தாருக்கு எழுதிய 19.07.2019 நாளிட்ட கடிதம்.
8) கே.பாலசுப்பிரமணியன் என்பவர் வீட்டு மனை பட்டாவிற்காக தாசில்தாருக்கு எழுதிய 19.07.2019 நாளிட்ட கடிதம்.

6.3.2020

9) குறிப்பாணை ந.க.எண். 5785/2010/ஆ2, நாள்.12/2019
10)குறிப்பாணை ந.க.எண். 46/2019/ஆ1, நாள்.07/2019

மேலும் மேற்படி நபரிடம் இருந்து எடுக்கப்பட்ட தாலுகா அலுவலக நகல் ஆவணங்களின் விவரங்கள் பின்வருமாறு:

1) பார்வை ஆர்.பி.டி எண்.2019/0105/02/193064, நாள்.15.11.2019
2) DIS. O.P.T/191807, 191806/2019, dt.9.10.19 in the name of Vijay Kishan Jawar
3) Deed of Absolute sale document No.9453/2006 between J.Muthukumar & A.Faizer Rahman
4) வட்ட அலுவலக நில அளவை பராமரிப்பு பணியாளர்களின் மாதாந்திர செய்மானப் பட்டியல்
5) Online Subdivision Patta Transfer – Rural Application list including Hand written papers of Tr.Venkatesan

மேலும் வட்டாட்சியர் அலுவலக அறைக்கு முன் நின்றிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் பாண்டியன், த/பெ.ஏழுமலை என்றும் தான் இவ்வலுகத்திற்கு பட்டா மாறுதல் விண்ணப்பம் கொடுக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்க, அவர் பாக்கெட்டிலிருந்து ரூ.1,120/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்க அவர் தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரிடமே பணம் ரூ.1,120/-ஐ சாட்சிகளின் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி இடைத்தரகர்களான திரு.பாண்டியன், திரு.வெங்கடேசன் மற்றும் திரு.செல்வராஜ் ஆகியோரை விசாரித்ததில் மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணி புரியும் நில அளவைப் பிரிவின் சார் ஆய்வாளர்கள் திரு.நாகராஜ் மற்றும் திரு.அருள் முருகன் ஆகியோரிடம் தினக்கூலி அடிப்படையில் அதிகாரப்பூர்வமாக அல்லாமல் பணி புரிந்து வருவதாக கூறினார்கள். இவ்வாறு பணி புரிவதற்கு மேற்படி இரு சார் ஆய்வாளர்களும் தங்களுக்கு பணம் தருவதாக தெரிவித்தார்கள். திரு.நாகராஜ் என்பவர் எண்.1/408, இந்திரா காந்தி தெரு, காரப்பாக்கம், சென்னை-600097 என்ற விலாசத்தில் தனி

(T. VANNAIYA) 06/03/2020

M. SARALA 6/3/2020

Judge SMP/SIC/ DMC

6.3.2020

6/3/2020

அலுவலகத்தை நடத்தி வருவதாகவும், அதே போல் திரு.அருள் முருகன் என்பவர் எண்.5/257, மாதா கோயில் தெரு, ஒக்கியம்பேட்டை, சென்னை-600096 என்ற விலாசத்தில் தனி அலுவலகத்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்தனர். இந்த தகவலின் பேரில் எண்.1/408, இந்திரா காந்தி தெரு, காரப்பாக்கம், சென்னை-600097 என்ற விலாசத்தில் தனி அலுவலகம் வைத்துள்ள திரு.நாகராஜனின் இடத்தை சோதனையிட காவல் ஆய்வாளர் திரு.ஜி.லாரன்ஸ் அவர்களையும், எண்.5/257, மாதா கோயில் தெரு, ஒக்கியம்பேட்டை, சென்னை-600096 என்ற விலாசத்தில் தனி அலுவலகம் வைத்துள்ள திரு.அருள் முருகனின் இடத்தை சோதனையிட காவல் ஆய்வாளர் திரு.எஸ். செந்தில்குமார் அவர்களையும், அரசு சாட்சி திரு.கெங்கையன் என்பவருடன் மேற்படி இல்லங்களுக்கு சோதனையிட அனுப்பப்பட்டது.

இதனிடையே மாலை சுமார் 4.30 மணியளவில் மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்த திரு.ஜவ்வாத் உறுசைன், வயது 45/2020, த/பெ.முகமது அலி, பழைய எண்.52, புதிய எண்.28, முக்தார் இன்சா பேகம் தெரு, ஆதம் மார்கெட், மவுண்ட் ரோடு, சென்னை-2, என்பவர் தான் பாலவாக்கம் கிராம புல எண்.95/2ஏ, 2பி, 2சி, 2டி-ல் 1020 சதுரடி பரப்பளவு கொண்ட வீட்டு மனையை வாங்கியதாகவும், அதற்கு பட்டா வாங்குது சம்பந்தமாக வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனையிட்டதில், அவரிடம் ரூ.1,00,000/- இருந்தது தெரிய வந்தது. அதற்கு விளக்கம் கேட்ட போது, 2019 டிசம்பர் மாதம் இவ்வலுவலகத்தை பட்டா வேண்டி அணுகிய போது, பதிவறை எழுத்தர் திரு.சிவக்குமார் தான் பட்டா வாங்கி தருவதாக கூறினார். அதன் பேரில் தான் பிப்ரவரி 2020 மூன்றாவது வாரத்தில் திரு.சிவக்குமாரை சந்தித்த போது, பட்டா வாங்குவதற்கு ரூ.1,00,000/- செலவாகும் என்றும், அந்த தொகையை இன்று (06.03.2020) கொண்டு வருமாறு கூறியதாகவும், அதன் பேரில் தான் மேற்படி ரூ.1,00,000/- கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். திரு.ஜவ்வாது உறுசைன் என்பவரிடம் சாட்சிகளின் முன்னிலையில் வாக்குமூலம் பெறப்பட்டு, மேற்படி ரூ.1,00,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் இது சம்பந்தமான பார்வை Rc.No.145/2020/B2 என்ற கோப்பு

T. Kanniyan 6/03/2020
(T. KANNAIYAN)

S.S 6.3.2020

M. Sarala 6/3/2020
M. SARALA

6.3.2020

6/3/2020

திரு.விக்னேஷ், முதுநிலை வருவாய் ஆய்வாளரின் B2 இருக்கையில் இருந்து எடுக்கப்பட்டது. அதன் நகல் சாட்சிகளின் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி ஆய்வின் போது, திருமதி.என்.ப்ரீத்தி பார்கவி, க/பெ.எம்.பாபு, வருவாய் கோட்டாட்சியர் (முழு கூடுதல் பொறுப்பு), தெற்கு கோட்டம், கிண்டி, சென்னை என்பவர், சோழங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்தார். வருவாய் கோட்டாட்சியரிடம் இன்று நடந்த சோதனை சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட ஆவணங்கள் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டது.

1) C.A.No.1502/2019 in the name of Lajbai Patel
2) பார்வை ஆர்.பி.டி எண்.2019/0105/02/255145/2020, நாள்.27.01.2020 in the name of V.K.Godandaraman
3) பார்வை ஆர்.பி.டி. எண்.194215/2019, நாள்.13.12.2019 in the name of Devadoss and Vasanthi.
4) பார்வை ஆர்.பி.டி. எண்.253784/2020, நாள்.24.01.2020 in the name of R.Krishnan
5) பார்வை RTR No. 253087/19, dt. 31.12.2019 in the name of N.Kandeeban.
6) பார்வை RTR No. 2020/0105/02/254740,254123/2020, dt. 18.02.2020 in the name of Sathishkumar.
7) கே.பிச்சேஸ்வரன் என்பவர் வீட்டு மனை பட்டாவிற்காக தாசில்தாருக்கு எழுதிய 19.07.2019 நாளிட்ட கடிதம்.
8) கே.பாலசுப்பிரமணியன் என்பவர் வீட்டு மனை பட்டாவிற்காக தாசில்தாருக்கு எழுதிய 19.07.2019 நாளிட்ட கடிதம்.
9) குறிப்பாணை ந.க.எண். 5785/2010/ஆ2, நாள்.12/2019
10) குறிப்பாணை ந.க.எண். 46/2019/ஆ1, நாள்.07/2019
11) பார்வை ஆர்.பி.டி. எண்.2019/0105/02/193064, நாள்.15.11.2019

12) DIS. O.P.T/191807, 191806/2019, dt.9.10.19 in the name of Vijay Kishan Jawar
13) Deed of Absolute sale document No.9453/2006 between J.Muthukumar & A.Faizer Rahman
14) வட்ட அலுவலக நில அளவை பராமரிப்பு பணியாளர்களின் மாதாந்திர செய்மானப் பட்டியல்
15) Online Subdivision Patta Transfer – Rural Application list including Hand written papers of Tr.Venkatesan.
16) File regarding Tr.Jawwad Hussain in Rc.No.145/2020/B2.
17) CCTV Recorder – Eurovigil – Serial No.38639891 Model – Discover HD10CHV2.0
18) பட்டியல் தொகை ரூ.1,04,550/-

சோதனையின் போது வட்டாட்சியர் அறையின் உள்ள பிரோவில் இருந்த பணம் ரூ.1,04,550/- அதில் பணமதிப்பு இழப்பு ரூபாய். 500 x 189 = 94,000/- மற்றும் ரூபாய் 100 x 100 = 10,000/-, 20 x 1 = 20/-, 10 x 3 = 30/- ஐ மேல் நடவடிக்கைகாக திருமதி.என் ப்ர்த்தி பார்கவி, வருவாய் கோட்டாட்சியர், தெற்கு கோட்டம், சென்னை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சோதனையின் போது, சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து ரூபாய்.1,24,000/- மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோழங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேடு 2020 மற்றும் நில அளவை பிரிவிலிருந்து கைப்பற்றப்பட்ட திரு.செல்வராஜ் என்ற இடைத்தரகர் தனது கைப்பட எழுதிய மனுதாரர் பதிவேடு ஆகியவை சாட்சிகளின் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி சோதனை இரவு சுமார் 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

(தி.கெங்கையன்)
இளநிலை உதவியாளர்
பொது மேலாளர் (பொறியியல்) அலுவலகம்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு
இணையம், 3வது பால்பண்ணை,
சோழங்கநல்லூர், சென்னை-600 119

(மு.சரளா)
இளநிலை உதவியாளர்
பொது மேலாளர் (பொறியியல்) அலுவலகம்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு
இணையம், 3வது பால்பண்ணை,
சோழங்கநல்லூர், சென்னை-600 119

(எஸ்.ஜூடி ஆப்பிள்கேயில்),
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வுக் குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை
ஆலந்தூர், சென்னை-16.

(ஜி.லாரன்ஸ்)
காவல் ஆய்வாளர்
சிறப்பு புலனாய்வுக் குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை
ஆலந்தூர், சென்னை-16.

6.3.2020
(எஸ்.செந்தில் குமார்)
காவல் ஆய்வாளர்
சிறப்பு புலனாய்வுக் குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை
ஆலந்தூர், சென்னை-16.

(கே.எஸ்.அனிதா)
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வுக் குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை
ஆலந்தூர், சென்னை-16.

Received Documents 1 to 16
& Demonetized money
1004, Rs. 1,04,550/-
06/03/2020